# பொழுதிற்கும் உண்டோ மறக்கும் நொடி?



(விருதுநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மேனாள் செயலாளரும், மேனாள் அமைச்சருமான மறைந்த வே.தங்கபாண்டியன் அவர்களின் இருபத்தி ஆறாம் ஆண்டு நினைவு நாளையொட்டி (31.07.2023) அவரது மகள் கவிஞர்.தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. எழுதியுள்ள கவிதாஞ்சலி)

**வெ**ள்ளாட்டு மந்தையொலியோடு
விடிகின்ற அதிகாலைகள்
அப்பாவிற்குப் பிடித்தமானவை.
அரைத்தூக்கமுடன் அவரது தோளுறங்கும்
என்னை அசங்காமல்
தலையணைக்கு மடைமாற்றல்
சத்தமின்றி செய்தித் தாளடுக்குதல்
கசப்பான இனிப்போடு காபி குடித்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்
கனல் சுட்ட வடுவின்
காந்தலை மறவாக் கனவு போல!

வேம்பின் இலைகள் சோம்பியிருக்கும்
பின் மதியங்கள் அப்பாவிற்குப் பிடித்தமானவை.
ஒரு புத்தகப் புரட்டல்
கடலைமிட்டாய் சுவைத்தல்
அம்மாவை வம்புக்கிழுத்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்
அகழ்வாராயும் கரங்களின்
அனுபவ ரேகைச் சுகம் போல!

மயில்கள் மரமடைகின்ற
அழகு அந்திகள் அப்பாவிற்குப் பிடித்தமானவை.
மக்களோடு பயணித்தல்
மகிழுந்தை நிறுத்திக் கைகுலுக்கல்
ஆழ்ந்த சிந்தனையுடன்
அடிவானம் பார்த்திருத்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்
மழை சுகித்த மண்சுவற்றில்
அடர்ந்திருக்கும் நினைவுப் பச்சயமென!

நிராயுதபாணியாய் நிலவொளிரும்
நடு இரவுகள் அப்பாவிற்குப் பிடித்தமானவை.
அம்மாவிடம் விருப்பப் பாடல்கள்
அன்றைய தினத்தின் பகிரல்கள்
பிள்ளைகளிடம் பகிர்ந்துண்டு
விண்மீன்களிடம் பகடி செய்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்.
கடல் மீறும் அலை தணிக்கும்
நுரைப் பூ பிறப்பென!

பொழுதுகள் புலர்ந்து உதிர்ந்து
பருவங்கள் பல கடந்த பின்னும்
ஒரு பிச்சைக்காரியின் பசியென
எனைத் துரத்தும் நிழலாய்
நான் அருகில் இல்லாமல் மரணித்த
அந்த நேரத்து அப்பாவையும்
அப்படியே வைத்திருக்கிறேன்
ஒரு தோல்வியின் துருவில்
முனைமழுங்கிய குறுவாளின் துயரமென!



**தமிழச்சி**
**தங்கபாண்டியன் எம்.பி.**

குஜராத் மருத்துவமனையில்

## தீ விபத்து!

காந்திநகர், ஆக.1-

குஜராத் மாநிலம் காந்தி நகர் சஹிபக் பகுதியில் தனியார் தொண்டு நிறு வனத்திற்குச் சொந்தமான மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில்,இந்தமருத்துவமனையின் 2வது தளத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.



தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம் தொண்டராம்பட்டு ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூபாய் 1.57 கோடி செலவில் புதிய கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு நேற்று முன்தினம் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு). கா அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம். ராமச்சந்திரன், ஏனாதி.பா. பாலசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புதுமைப்பெண் திட்டம் மூலம்

# இதுவரை 3,27,766 மாணவிகள் பயன் அடைந்துள்ளனர்!

## தமிழ்நாடு அரசு தகவல்!

சென்னை, ஆக.1-

கடந்தாண்டு தொடங்கப்பட்ட ‘புதுமைப்பெண்’ திட்டம் மூலம் இதுவரை 3,27,766 மாணவியர்கள் பயனடைந்துள்ளனர் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின் கீழ் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்து, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் 1,000 வழங்கும் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுமை பெண் திட்டத்தின் கீழ் 2022-23-ஆம் நிதியாண்டில் முதற்கட்டமாக அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் சுமார் 1,16,260 மாணவிகளும், 2ம் கட்டமாக 93,105 மாணவிகளும் பயனடைந்த வகையில் 100.11 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் 2023-24-ஆம் நிதியாண்டிற்கு 349.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டதில், நாளது வரை 60.86 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டதில் சுமார் 2,11,506 மாணவிகள் பயனடைந்துள்ளனர். இந்த திட்டம் தொடங்கப்பட்டது முதல் நாளது வரை இத்திட்டத்திற்கென 160.97 கோடி பணப் பலனாக மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவிகள் தங்களது குறைகளை பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ‘புதுமைப் பெண்’ திட்டம் மாணவியர், கல்விக்கு ஊக்கமளிப்பதுடன், வரும் காலங்களில் யாரும் மறுக்க முடியாத பெரும் பயன்களை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

**இத்திட்டத்தின் மூலம் பயனடைய தேவையான தகுதி:**

6ம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ்நாடு அரசு பள்ளிகளில் படித்த மாணவிகளாக இருத்தல் அவசியம்.

அரசு பள்ளிகள் என்பது பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகள், ஆதிதிராவிடர் நல பள்ளிகள், நகராட்சி பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள், பழங்குடியினர் நல பள்ளிகள், கள்ளர் சீர்மரபின பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பள்ளிகள், வனத்துறை பள்ளிகள், சமூக பாதுகாப்புத் துறை பள்ளிகள் போன்றவற்றில் பயிலும் மாணவிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடைய இயலும்.

இலவச கட்டாய கல்வி திட்டத்தின் கீழ் ஆர்டிஇ மூலமாக 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை தமிழக தனியார் பள்ளியில் பயின்ற மாணவியர், 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்றால் இத்திட்டம் மூலம் பயனடைய முடியும்.

முதன்முதலில் இளநிலை படிப்பில், கலை, அறிவியல், தொழில்முறை படிப்புகள், துணை மருத்துவம், டிப்ளமோ, இளநிலை மற்றும் முதுநிலை இணைந்த படிப்புகள் ஆகியவற்றில் மேற்படிப்பை தொடர விரும்பும் மாணவியருக்கு, படிப்பு முடியும் வரை உதவித்தொகையாக மாதம் 1000 வழங்கப்படும்.

கலை மற்றும் அறிவியல் படிப்பிற்கு முதல் 3 ஆண்டுகளும் தொழிற்படிப்புகளில் பொறியியல் படிப்பிற்கு முதல் 4 ஆண்டுகளும், மருத்துவக்கல்வியில் முதல் 5 ஆம் ஆண்டு வரை பயிலும் மாணவிகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

ஒரே வீட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவியர் இருந்தாலும் இந்த திட்டத்தின் கீழ் உதவி பெறலாம்.

வேறு திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறும் மாணவியரும் கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற இயலும்.

ஏற்கனவே உயர்கல்வியில் சேர்ந்த மாணவியரும், மீதமிருக்கும் ஆண்டுகளுக்கான படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.

புதிய மறுசீரமைக்கப்பட்ட வலைதளம் (https://www.pudhumaipenn.tn.gov.in) உருவாக்கப்பட்டுள்ளது. மாணவியர்கள் தாங்கள் உயர்கல்வி பயிலும் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளரை கொண்டு இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்திட இயலும்.

**இதன் பயன்கள்**

பெண்களுக்கு உயர் கல்வி அளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல்.

குழந்தை திருமணத்தை தடுத்தல்.

குடும்ப சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல்.

பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தை குறைத்தல்.

பெண் குழந்தைகளின் விருப்ப தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பை தொடர ஊக்குவித்தல்.

உயர் கல்வியினால் பெண்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்து துறைகளிலும் பங்கேற்க செய்தல்.

உயர்கல்வி உறுதித்திட்டத்தின் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல்.

பெண்களின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்தல்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையில் காலியாக உள்ள

# அனைத்துப் பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும்!

## தஞ்சையில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



தஞ்சை, ஆக.1-

தஞ்சாவூர் மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் தலைமையில் நேற்று முன்தினம் (30.07.2023) பல்வேறு புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார்.

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததா வது:

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம் தொண்டராம்பட்டு ஊராட்சியில் ரூபாய் 1.57 கோடி செலவில் புதிய கட்டிடங்கள் இன்று திறக்கப்பட்டது. இதில் தொண்டராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார பொது சுகாதார ஆய்வகம் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவு கட்டிடம் ரூபாய் 23.30 இலட்சம் மதிப்பீட்டிலும், வாண்டையார் இருப்பு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஹோமியோபதி பிரிவு கட்டிடம் ரூபாய் 23.30 இலட்சம் மதிப்பீட்டிலும், தெக்கூர் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும், மட்டும் ரவுசாபட்டி புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும் இன்று தொண்டாரம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டுள்ளது.

முன்னதாக பட்டுக்கோட்டை வட்டம் ஆலடிக்குமளையில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தில் ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் நோயாளிகளுடன் உடனிருப்போர் தங்குமிடம் இன்று முதல் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது. தொண்டராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளை முதல் 108 ஆம்புலன்ஸ் (மருத்துவ அவசர ஊர்தி) சேவை தொடங்கப்படும்.

விரைவில் சுகாதாரத் துறையில் காலியாக உள்ள அனைத்து பணிகளும் நிரப்பப்பட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

முன்னதாக பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு. பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார்

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), மருத்துவ பணிகள் இணை இயக்குனர் மரு. திலகம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ஆர்.பாலாஜி நாதன், துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் மரு. பா.கலைவாணி, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திருமதி. உஷா புண்ணியமூர்த்தி, ஒரத்தநாடு ஒன்றிய குழுத் தலைவர் திருமதி. சி.பார்வதி சிவசங்கர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம். ராமச்சந்திரன், ஏனாதி. பா. பாலசுப்பிரமணியன், பட்டுக்கோட்டை நகராட்சி நகர மன்ற தலைவர் திருமதி. செ. சண்முகப்பிரியா செந்தில்குமார், துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இலஞ்சப் புகார் :

# தேனி மருத்துவக் கல்லூரி முதல்வர் பணியிடை நீக்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவு!

சென்னை, ஆக.1-

தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் மீனாட்சி சுந்தரம் தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள உணவக உரிமையாளர் மாரிசாமியிடம் இலஞ்சம் கேட்டு பெற்றதாக ஊடகத்தில் வெளியான செய்தியின் அடிப்படையில், தேனி மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநரை, நேரில் சென்று உணவக உரிமையாளரிடம் நடைபெற்ற ஊடகத்தில் வெளியான செய்தி உண்மைதானா? என்று விசாரணை நடத்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவிட்டார்.

விசாரணையின் அடிப்படையில், தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மீனாட்சி சுந்தரம் இலஞ்சம் வாங்கியது உண்மை என்று தெரியவந்த காரணத்தினால், அவர் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ள தற்காலிக பணியிடை நீக்கம் செய்ய அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளார்.




புதுக்கோட்டையில் புத்தகத் திருவிழாவையொட்டி இலட்சியக் கவிஞர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் நடந்த கவியரங்கத்தில் கவிஞர்கள் வீ.ம.இளங்கோவன், முபா, தஞ்சை இனியன், அறந்தாங்கி பா.வெங்கடேசன், வல்லம் தாஜுபால் ஆகியோர் கவிதைப் படைத்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாஞ்சில் கி. மனோகரன்

## ஆகஸ்ட் 1 (2000)



பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.

நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.

இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.

கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் ‘நாவுக்கரசர்’ என அழைக்கப்பட்டவர்.

கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.

“என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**